# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1906/44 - 2015 මාර්තු මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.03.19

*1906/44 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாணத்தில் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கமொன்றுக்கான பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளின் 23 ஆம் துணைவிதியின் பிரகாரம் ஆக்கப்பட்டுள்ள விதிகள்**

*வடமேல் மாகாணத்தில் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கமொன்றுக்கான பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளின் 23 ஆம் துணைவிதியின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திசாநாயக்க முதியன்சலாகே குலமின சந்தன திசாநாயக்க ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் பலநோக்கு கூட்டுறவுச் சங்கமொன்றின் கிளை நிர்வாகச் சபையை தெரிவு செய்வது சம்பந்தமாக பின்வரும் விதிகளை ஆக்குகின்றேன்.*

*டி. எம். கே. சி. திசாநாயக்க,*
*கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்*
*கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,*
*வடமேல் மாகாணம்.*

*குருநாகல்,*
*2015, பெப்புருவரி 25.*

*1.* ***சுருக்கப்பெயர் :***

*இந்த விதிகள் "வடமேல் மாகாணத்தின் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிர்வாகச் சபையை தெரிவு செய்வதற்கான விதிகள்" என அழைக்கப்படும்.*

*2.* ***வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்கள் அட்டவணை :***

*2.1 பலநோக்கு கூட்டுறவுச் சங்கமொன்றில் பதிவு செய்யப்பட்ட துணைவிதியின் 22 (1) ஆம் துணைவிதியின் பிரகாரம் தெரிவு செய்யப்படவேண்டிய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிந்தெடுப்பதற்காக வாக்களிக்கத் தகைமை பெற்ற அங்கத்தவர்களின் ஒவ்வொரு வருடத்திலும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று முடிவடைவதான அட்டவணையொன்று விதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு அடுத்துவரும் ஆண்டின் சனவரி மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் முப்பிரதிகளில் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதில் ஒரு பிரதி சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் முக்கியமான இடமொன்றிலும் மற்றுமொரு பிரதி அதன் கிளையிலும் அல்லது கிளையொன்று இல்லாதவிடத்து கிளையின் அதிகார பிரதேசத்தில் சங்கத்தின் வர்த்தக நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்படும் வேறோர் இடத்திலும் சனவரி மாதம் 16 ஆந் திகதியிலிருந்து 31 ஆந் திகதிவரை பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும். ஆயினும், ஏதேனும் கூட்டுறவுச் சங்கமொன்றின் அங்கத்தவர்*

தெரிவு செய்வதற்கான திகதியன்றுக்கு மூன்று (03) மாதங்களுக்கு முன்னர் மாதத்தின் இறுதி நாளன்று முடிவடைந்த அங்கத்தவர் அட்டவணையானது எதிர்வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த அங்கத்தவர் அட்டவணை இந்த மாதத்தின் 16 ஆந் திகதியிலிருந்து மாதத்தின் இறுதிவரை அவ்வாறு பார்வைக்கு வைக்கப்படுதல் வேண்டும். முன்வைக்கப்படும் எதிர்ப்புகள் பற்றிய திருத்தங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்தல் வேண்டும்.

2.2. மேலே 2.1 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர் அட்டவணையில் பெயரை பதிவதற்கு தகுதி பெற்றுள்ள எவரேனும் ஒருவரின் பெயர் அவ்வாறு சேர்க்கப்படாத பட்சத்தில் அதனை சேர்த்தற் பொருட்டு அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட 16 ஆந் திகதியிலிருந்து குறித்த மாதத்தின் இறுதித் திகதிவரை சங்கத்தின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்வதற்கு முடியும். இத்தகைய மேன்முறையீடு பணிப்பாளர் சபையினால் பரிசீலனை செய்து திருத்தங்கள் எதுவுமிருப்பின் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் குறித்த திருத்தங்களை அங்கத்தவர் அட்டவணையில் சேர்த்தல் வேண்டும்.

2.3 மேலே 2.1 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர் அட்டவணையில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர் எவருக்கும் உறுப்பினர் அட்டவணையில் எவரேனும் ஒருவரின் பெயர் காணப்படுவது பற்றி சங்கத்தின் செயலாளருக்கு எழுத்துமூலம் ஆட்சேபனையை தெரிவிக்கலாம் என்பதோடு, இந்த ஆட்சேபனை சம்பந்தமான காரணங்களும் குறித்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். இத்தகைய ஆட்சேபனைகள் முன்வைக்க முடியுமாவது குறித்த அங்கத்தவர் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட 16 ஆந் திகதியிலிருந்து குறித்த மாதத்தின் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னராகும். பணிப்பாளர் சபையினால் அத்தகைய ஆட்சேபனைகளும் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்பதோடு, ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுமாயின் அத்தகைய திருத்தங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்படல் வேண்டும்.

2.4 2.2 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள மேன்முறையீடுகளும் 2.3 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேபனையும் பணிப்பாளர் சபையினால் உரிய காலத்திற்குள் முடிவு செய்யப்படாவிட்டால் அத்தகைய மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் பற்றிய விடயங்களை பரிசீலனை செய்து தேவையாயின் அங்கத்தவர் அட்டவணையை உரியவாறு திருத்துமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பணிப்பாளருமானவர் சங்கத்திற்கு எழுத்துமூலம் கட்டளையொன்றைச் செய்யலாம். அச்சந்தர்ப்பத்தில் அதற்கமைவாக சங்கமானது செயலாற்றுதல் வேண்டும். திருத்தியமைக்கப்பட்ட அங்கத்தவர் அட்டவணை சங்கத்தின் செயலாளரினால் அடுத்துவரும் மாதத்தின் இறுதி திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தயாரிக்க வேண்டுமென்பதோடு, சங்கத்தின் தலைவரினாலும் பணிப்பாளரினாலும் செம்மையானதென உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2.5 உத்தியோகத்தர்கள் தெரிவு நடாத்தப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் கிளைகள் ஒவ்வொன்று சார்பிலும் 2.4 விதிக்கு அமைய உறுதிப்படுத்தப்பட்ட அங்கத்தவர் அட்டவணையின் மூன்று (03) பிரதிகள் ஏழு நாட்களுக்குள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பணிப்பாளருமானவருக்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பணிப்பாளருமானவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரண்டு பிரதிகள் சங்கத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். இந்த அங்கத்தவர் அட்டவணைக்கு அமைவாக தேர்தல் நடாத்தப்படுதல் வேண்டும்.

2.6 விதி 2.1 இன் கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர் அட்டவணை சங்கத்தினால் தயாரிக்கப்படவில்லையாயின் அல்லது விதி 2.2, 2.3 ஆகியவற்றின் கீழ் பணிப்பாளர் சபையினால் திருத்தப்படவில்லையாயின் அல்லது விதி 2.4 இன் கீழ் அத்தாட்சிப்படுத்தப்படவில்லையாயின் அல்லது விதி 2.5 இன் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பணிப்பாளருமானவருக்கு சமர்ப்பிக்கப்படவில்லையாயின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளருமானவரினால் வேறோர் உத்தியோகத்தரின் ஊடாக அங்கத்தவர் அட்டவணையை தயாரிப்பதற்கு அல்லது ஏற்புடையதான வேறு ஏதேனும் கட்டளையொன்றை விதிக்க முடியும். அச்சந்தர்ப்பத்தில் குறித்த அங்கத்தவர் அட்டவணைக்கு அமைவாக தேர்தல் நடாத்துவது சட்டபூர்வமானதாதல் வேண்டும். சங்கத்தின் பணிப்பாளர் சபை அதன் பொறுப்புக்களை தவிர்க்கும் காரணத்தினால் ஏதேனும் தொகையொன்றை ஏற்கவேண்டி ஏற்பட்டால் குறித்த பெறுமதியை பணிப்பாளர் சபையிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 66 (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளையிடுவது சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

**பொது விடயங்கள்**

பிரதான தேர்தல் உத்தியோகத்தரின், வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்களின், உதவி தேர்தல் உத்தியோகத்தர்களின் நியமனம்

3.1 ஆணையாளரினால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்று சார்பிலும் இந்த விதிகளின் கீழ் பிரதான தேர்தல் உத்தியோகத்தர் ஒருவரையும் தேவையான எண்ணிக்கையில் வலயப் பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்களையும் உதவி தேர்தல் உத்தியோகத்தர்களையும் நியமித்தல் வேண்டும். அத்தகைய நியமனங்கள் இங்கு "அ" அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாதல் வேண்டும்.

3.2 அவ்வாறு ஆணையாளரினால் நியமிக்கப்படும் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு இந்த விதிகளின் கீழ் ஆணையாளருக்கு மாத்திரம் பயன்படுத்தக்கூடிய அதிகாரங்கள் தவிர ஏனைய எல்லா அதிகாரங்களையும் பிரயோகிக்கலாம்.

3.3 தமது சங்கத்தின் தேர்தல் நடாத்தப்பட வேண்டிய கிளை பற்றிய விபரங்களை சங்கத்தின் செயலாளரானவர் பொது சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைவதற்கு மூன்று (03) மாதங்களுக்கு முன்னர் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டுமென்பதோடு, ஆணையாளரினால் நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்றல் உட்பட தேர்தல் நடாத்தும் திகதி பற்றி முன்னதாகவே விதித்துரைத்தல் வேண்டும். அத்தகைய திகதிகளை மாற்றும் அதிகாரமும் அவருக்கு உண்டு.

3.4 நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்ற சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வழங்கப்படும் சந்தர்ப்பம் வரைக்கும் தேர்தலை உரிய முறையில் நடாத்துவது பிரதான தேர்தல் உத்தியோகத்தரினதும் வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்களினதும் உதவி தேர்தல் உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். இந்த விதியின் 8.1 ஆம் 13.2 ஆம் விதிகளின் கீழ் தேர்தல் முடிவுகள் சங்கத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதோடு எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆணையாளரின் பணிப்பின் கீழ் செயலாற்றுதல் வேண்டும்.

3.5 நியமனப்பத்திரங்கள் அத்துடன் அவற்றுக்கான ஆட்சேபனைகளும் அவரால் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி, நேரம், இடம் ஆகியவற்றை குறிப்பிட்ட அறிவித்தல் தேர்தல் உத்தியோகத்தரினால் ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் சங்கத்தின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

3.6 தேர்தல் உத்தியோகத்தர் அதே நேரத்தில் அத்தகைய அறிவித்தலில் போதிய அளவு அறிவித்தலின் பிரதிகளை ஒவ்வொரு சங்கத்தினதும் தலைமை அலுவலகத்திற்கும் கிளைகளிலும் கிளை அதிகார பிரதேசங்களிலும் ஏனைய முக்கிய இடங்களிலும் பார்வைக்கு வைப்பதற்கு சங்கத்தின் செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு, இந்த அறிவித்தலை பார்வைக்கு வைக்கும் பொறுப்பானது சங்கத்தின் செயலாளரானவர் வகித்தல் வேண்டும்.

3.7 பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரினால்/உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் கிளை நிர்வாக சபைக்கான செயற்குழுக்களுக்கான தேர்தல் நடாத்தும் இடம் சம்பந்தமாக தீர்மானிக்க வேண்டுமென்பதோடு, 2.5 ஆம் 2.6 ஆம் விதிகளுக்கு அத்தாட்சிப்படுத்தப்பட்ட இறுதி வாக்காளர் அட்டவணைக்கு அமைவாக தேர்தல் நடாத்தப்படுதல் வேண்டும்.

3.8 இந்த விதிகளின் கீழ் தேர்தல் நடாத்தப்படும் போது பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தருக்கு/உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு தேவையான சகல ஒத்துழைப்பினையும் சங்கத்தின் பணிப்பாளர் சபையும் குறித்த சங்கத்தின் பதவியணியும் குறைவின்றி வழங்குதல் வேண்டும்.

பகுதி II

**தகைமை நீக்கம்**

4.1 பின்வரும் தன்மையரான அங்கத்தவர் எவரேனும் சங்கத்தின் கிளை நிர்வாகச் சபைக்கு தெரிவு செய்யப்படுவதன் பொருட்டு, நியமிக்கப்படவோ அதற்கு தெரிவு செய்யப்படவோ முடியாதவராவார்.

(அ) கிளையினது வாக்காளர் அட்டவணையில் பெயர் காணப்படாத ஒருவர் ;

(ஆ) 21 வயதுக்கு உட்பட்டவர் ;

(இ) முன்னைய மூன்று (03) ஆண்டுகளில் குற்றவியல் குற்றமொன்று சம்பந்தமான வழக்கொன்றில் குற்றவாளியாக்கப்பட்டவர் அல்லது ஏதேனும் விதத்தில் மூன்று (03) மாதங்களுக்கு மேற்பட்ட மறியத்தண்டனை விதிக்கப்பட்டவர் குறித்த தண்டனை இடைநிறுத்தப்பட்ட ஒருவர் ;

(ஈ) கடனிறுக்க நிருவாகமின்மை கோரி விண்ணப்பம் செய்தவர் அல்லது அவ்வாறு தீர்ப்பு பெற்றவர் ;

(உ) குறித்த சங்கத்திடம் அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கத்திடம் பெற்ற ஏதேனும் கடனை அல்லது கூட்டுறவுச் சட்டத்தின் 44(6) ஆம் பிரிவின் கீழ் மேல் விதிப்பினை அல்லது 66 ஆம் பிரிவின் கீழான கட்டளைக்கு அமைவாக செலுத்தப்பட வேண்டிய வேறு ஏதேனும்தொகையொன்றினை அல்லது செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தவணைத் தொகையொன்றை மீளச் செலுத்துவதனை மூன்று (03) மாதத்தால் அல்லது அதற்கு கூடுதலான காலத்தால் தவறிய ஒருவர் ;

(ஊ) வர்த்தகர் ஒருவராக சங்கத்தின் நலத்திற்கு எதிரான ஏதேனும் வர்த்தகம் ஒன்றில் ஈடுபட்டுள்ள ஒருவர் ;

(எ) இச்சங்கத்திடமிருந்து வருமானம் அல்லது இலாபம் தரும் பதவி வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன் அங்கீகாரமின்றி சங்கத்தின் பணிக்கொடை தொகையொன்றைப் பெறும் ஒருவர் ;

(ஏ) இந்த சங்கத்தில் அல்லது வேறு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றில் சம்பளம் பெறும் ஊழியர் ஒருவர் ;

(ஐ) அங்கத்தவர் என்ற முறையிலன்றி எவ்வாறாயினும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சங்கத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் அல்லது சங்கம் செய்த விற்பனையில் அல்லது கொள்வனவில் அல்லது நடைமுறையிலிருக்கும் அல்லது பேச்சிலிருக்கும் சங்கப் பணத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் கரிசனையுடையவராகவிருப்பவர் ;

(ஒ) கடந்த ஐந்து (05) ஆண்டுகளுள் கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளின் பிரகாரம் தனது பதவியிலிருந்து அல்லது சேவையிலிருந்து விலக்கப்பட்ட ஒருவர் ;

(ஓ) பணிப்பாளர் சபையினால் அல்லது கிளை நிருவாக சபையினால் உறுப்பினராக கருத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாத அல்லது பணிப்பாளர் சபைக்கு மேன்முறையீடு சமர்ப்பித்துள்ள அல்லது கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 60(2) ஆம் பிரிவின் கீழ் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட அல்லது இந்த விதிகளின் 2.4 ஆம் 2.6 ஆம் விதிகளின் கீழ் வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர் ;

(ஔ) நியமனப் பத்திரம் பொறுப்பேற்கும் திகதிக்கு முன்னைய ஒரு (01) வருட காலத்திற்கு குறையாத காலப்பகுதியில் தனது கிளை நிருவாக சபை அதிகார பிரதேசத்தில் சங்கத்தினால் எவ்வித வர்த்தக நிலையமொன்றையும் நடாத்திச் செல்லாத கிளை அங்கத்தவர் ஒருவர். ஆயினும், சங்கத்தின் கிட்டிய பொதுச் சபையின் அல்லது பணிப்பாளர் சபையின் உறுப்பினர் அல்லாத ஒருவருக்கு இந்த ஏற்பாடுகள் ஏற்புடையதாகாதிருத்தல் வேண்டும்.

(க) நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் அங்கத்துவத்தை இழந்தவர்; அத்துடன்

(ங) கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் உறுதியான அல்லது 44(6) ஆம் பிரிவின் கீழ் மேலதிக விற்பனை அல்லது 66 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து குறித்த உறுதியான கொடையில் அல்லது மேலதிக விதிப்பில் அல்லது கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியை முழுமையாக மீளச் செலுத்தி முடிவுசெய்து மூன்று (03) வருட காலம் கடக்காத ஒருவர்.

### நியமனப் பத்திரங்கள்

5.1 நியமனப்பத்திரம் - நிருவாக சபைத் தேர்தலுக்கு நிற்கும் ஒவ்வொரு அபேட்சகரும் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவரால் முன்மொழியப்பட்டு சங்கத்தின் வேறொரு அங்கத்தவரால் வழிமொழியப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அபேட்சகரும் அவரின் முன்மொழிபவரும் வழிமொழிபவரும் சங்கத்தின் அங்கத்தவர்களாகவும் தேர்தல் நடாத்தப்படும் கிளையின் வாக்காளர் அட்டவணையில் தமது பெயர்களை உடையவர்களாகவுமிருத்தல் வேண்டும். இந்த விதிகளின் அட்டவணை 'ஆ' வில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அபேட்சகர் ஒவ்வொருவரது நியமிப்பும் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

### அபேட்சகர், முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோரின் உறுதியுரை

5.2 அபேட்சகர் ஒவ்வொருவரும் இந்த விதிகளின் அட்டவணை 'இ' வில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் உறுதியுரையினை அளித்து அதனை நியமிப்புப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

5.3 முன்மொழிபவர், வழிமொழிபவர் ஒவ்வொருவரும் இந்த விதிகளின் அட்டவணை "இ 1" இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் இதேபோன்ற உறுதியுரையினைச் செய்தல் வேண்டும்.

### நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல்

6.1 ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கிளைக்கான தேர்தலுக்கென குறிப்பிட்ட தினத்தன்று தேர்தல் உத்தியோகத்தர்/ வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவி தேர்தல் உத்தியோகத்தர்கள் அந்நியமிப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு குறிப்பிட்ட இடத்தில் பிரசன்னமாயிருந்து ஒப்படைக்கப்படும் நியமிப்புப் பத்திரங்களை கையேற்றுக் கொள்ளல் வேண்டும்.

6.2 ஒவ்வொரு நியமனப் பத்திரமும் அட்டவணை "ஆ" வில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் 4 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, முன்மொழிபவர், வழிமொழிபவர், அபேட்சகர் ஆகியோரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, "இ", "இ1" இன் கீழ் செய்யப்பட்ட உறுதியுரையுடன் நியமனப் பத்திரம் பொறுப்பேற்பதற்காக குறிப்பிடப்பட்ட நாளில் மு.ப. 9.00 இற்கும் மு.ப. 10.00 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அபேட்சகரினால் அல்லது முன்மொழிபவரினால் அல்லது வழிமொழிபவரினால் தேர்தல் உத்தியோகத்தரிடம்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரிடம்/உதவி தேர்தல் உத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

6.3 அவ்வாறு ஒப்படைக்கப்படும் நியமனப் பத்திரங்கள் தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவி தேர்தல் உத்தியோகத்தர் இந்த விதிகளின் 4.1 ஆம் விதிகளின் கீழ் அபேட்சகரும் முன்மொழிபவரும் வழிமொழிபவரும் தகைமை நீக்கம் பெற்றவரல்லர் என்பதை ஆராய்ந்து பார்த்து தகைமை நீக்கம் உடையவராயின் அல்லது வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவராயின் அல்லது அவர்களில் எவரேனும் ஒருவர் நியமனப் பத்திரங்களை கையளிக்கவில்லையாயின் இந்த விதிகளின் 5.1 அல்லது 5.2 அல்லது 5.3 இன் விதிக்கு அமைவாக நியமனப் பத்திரங்கள் பூர்த்தியற்றதாயின் இந்த நியமனப் பத்திரங்களை நிராகரித்தல் வேண்டும்.

6.4 அதன் பின்னர் தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவி தேர்தல் உத்தியோகத்தர் மேலே விதி 6.3 இன் கீழ் தம்மால் நிராகரிக்கப்படாத நியமிப்புப் பத்திரம் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளை நியமனப் பத்திரங்களைப் பெற்ற இடத்தில் வெளித்தெரியும் விதத்தில் பார்வைக்கு வைக்கச் செய்தல் வேண்டும்.

### ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளல்

7.1 தேர்தல் நடக்கும் கிளையில் வாக்காளர் அட்டவணையில் பெயர் காணப்படும் எவருக்கும் அத்தகைய நியமிப்புக்கள் எவற்றுக்கேனும் ஆட்சேபனை தெரிவிக்கலாம். அவ்வாறான ஆட்சேபனைகள் எழுத்துமூலம் இருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆட்சேபனைகள் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் தினத்தில் மு.ப. 10.00 மணிக்கும் மு.ப. 11.00 மணிக்கும் இடையில் தேர்தல் உத்தியோகத்தரினால்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் பொறுப்பேற்கப்படல் வேண்டும். இதற்குப் புறம்பாக எவ்வித ஆட்சேபனையும் பொறுப்பேற்கப்படலாகாதென்பதோடு, இதற்குப் புறம்பாக பொறுப்பேற்கப்பட்டு செய்யப்படும் சகல கட்டளைகளும் வலுவற்றதாதலும் வேண்டும்.

7.2 பின்வரும் காரணங்களின் பொருட்டே ஏதேனும் நியமிப்புக்கு ஆட்சேபனைகள் தெரிவித்தல் வேண்டும் :-

(அ) அபேட்சகர், முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோர்களில் எவரேனும் ஒருவர் மேலே 4.1 ஆம் விதியிலுள்ள ஏற்பாடுகளின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் கீழ் தகைமையற்றவராயிருத்தல் ;

(ஆ) அபேட்சகர், முன்மொழிபவர், வழிமொழிபவர் பெயர் வாக்காளர் அட்டவணையில் இல்லாதிருத்தல் ;

(இ) அபேட்சகரோ அல்லது முன்மொழிபவரோ அல்லது வழிமொழிபவரோ நியமனப் பத்திரத்தை கையளித்திருத்தல் ;

7.3 விதி 7.2 (ஆ), (இ) என்பவற்றின் கீழ் தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவி தேர்தல் உத்தியோகத்தர் ஆட்சேபனையினை ஏற்றுக்கொள்வாராயின், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ள நியமனப் பத்திரத்தை அவர் நிராகரித்தல் வேண்டும்.

7.4 விதி 7.2 (ஆ), (இ) என்பவற்றின் கீழ் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவி தேர்தல் உத்தியோகத்தர் தன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமிப்புப் பத்திரங்களை ஆதாரமாகக் கொண்டு தேர்தலை நடாத்துதல் வேண்டும். விதி 7.2 (அ) வின் கீழ் அத்தகைய ஆட்சேபனைகள் ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். அதன் மேல் அவரது தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும்.

7.5 விதி 7.2 (அ) வின் கீழ் ஏதேனும் ஆட்சேபனை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, அத்தகைய அபேட்சகர் ஒருவரது தெரிவு இதன் காரணமாக முற்றாகவே செல்லாததாகும். இத்தீர்மானம் காரணமாக நிர்வாக சபையில் ஏற்படும் வெற்றிடத்தினை சங்கத்தின் உபவிதிகளுக்கு அமைவாக நிரப்புதல் வேண்டும்.

**நாட்குறிப்பேடு**

7.6 தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவி தேர்தல் உத்தியோகத்தர் இரு பகுதிகளைக் கொண்ட நாட்குறிப்பேட்டைப் பேண வேண்டும். ஒரு பிரதி சம்பந்தப்பட்ட சங்கத்திற்கும் மறு பிரதி பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும். விதி 7.2 "அ" இன் கீழ் கிடைக்கப்பெற்ற எழுத்துமூலமான ஆட்சேபனைகள் தேர்தல் உத்தியோகத்தரினால்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரினால்/உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். விதி 7.2 (ஆ), (இ) ஆகியவற்றின் கீழ் கிடைக்கப்பெற்ற எழுத்துமூலமான ஆட்சேபனைகள் தேர்தல் உத்தியோகத்தரினால்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரினால்/உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

பின்வரும் விடயங்கள் நாட்குறிப்பேட்டின் 1 ஆம் பகுதியில் பதியப்படுதல் வேண்டும் :-

(அ) சங்கத்தின் பெயரும் முகவரியும் ;

(ஆ) கிளையின் இலக்கமும் , முகவரியும் ;

(இ) நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அபேட்சகர்களின் பெயர்களும் பெற்ற நேரமும் ;

(ஈ) இவ்விதிகளின் விதி 7.1 இன் கீழ் ஆட்சேபனைகளை ஒப்படைத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் ; அத்துடன் அத்தகைய ஆட்சேபனைகளைப் பெற்ற நேரமும் ;

(உ) நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பெற்ற அபேட்சகரது பெயர்களும் அவ்வண்ணம் நிராகரித்தற்கான காரணங்களும் ;

(ஊ) விதி 7.2 (அ), 7.2 (ஆ), (இ) இன் கீழ் ஆட்சேபனைக்கு ஆளான அபேட்சகர்களின் பெயர்களை வெவ்வேறாக குறிப்பிடுதல் ; அத்துடன்

(எ) விதி 9.2 இன் கீழ் அபேட்சகர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கங்கள்.

7.7 பின்வரும் விடயங்கள் நாட்குறிப்பேட்டின் 2 ஆம் பகுதியில் பதியப்படுதல் வேண்டும் :-

(அ) வாக்களிப்பு நிலையம் ;

(ஆ) வாக்களிப்பு தொடங்கும் திகதியும் நேரமும் ;

(இ) வாக்களிப்பு முடிவடையும் திகதியும் நேரமும் ;

(ஈ) தேர்தல் உத்தியோகத்தரினால்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரினால் /உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் பயன்படுத்தப்பட்ட இலாஞ்சனையும் ஒப்பமும் ;

(உ) பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்ட வாக்குச் சீட்டுக் கணக்கு ;

(ஊ) வாக்களிப்புத் தொடங்கும் முன் தேர்தல் உத்தியோகத்தரிடம்/உதவித் தேர்தல் உத்தியோகத்தரிடமிருந்த வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| (1) | வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டவற்றில் நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் தவிர்ந்த வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை | ....................................... |
| (2) | நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களின்எண்ணிக்கை | ............ ........................ |
| (3) | பாவிக்கப்படாத வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை | ........................ ............. |
| | மொத்தம் | |

(எ) ஒவ்வொரு அபேட்சகருக்கும் கிடைத்த வாக்குகளின் மொத்த எண்ணிக்கை

(1) ...................................
(2) .................................
(3) .................................
(4) ..................................
(5) ..................................
(6) ..................................
(7) .................................
(8) .................................
(9) .................................
..................................
..................................
..................................

முழுமொத்தம்

(ஏ) இந்த விதிகளின் 8.2, 8.1 என்பனவற்றின் கீழ் முறையாக தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் பெயர்கள் :-

பகுதி III

**தேர்தல் நடவடிக்கைகள்**

8.1 **போட்டியில்லாத தேர்தல்கள்** : முறையே நியமிப்புப் பெற்ற அபேட்சகர்களின் எண்ணிக்கை ஒன்பது அல்லது அதற்கு குறைவாக அத்துடன் ஐந்து அதற்கு கூடுதலாக இருக்குமிடத்து ஒவ்வொரு அபேட்சகரும் தெரிவு செய்யப்பட்டவர்களாகவே கருதப்படுதல் வேண்டும். தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர் / உதவித் தேர்தல் உத்தியோகத்தர் அது பற்றி சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலக்கூற்று ஒன்றை வழங்குதல் வேண்டும்.

8.2 **போட்டியுள்ள தேர்தல்கள்** : முறையே நியமிப்புப் பெற்ற அபேட்சகர்களின் எண்ணிக்கை ஒன்பதுக்கு மேற்பட்டதாயிருப்பின், தேர்தல் உத்தியோகத்தரினால்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரினால்/உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் அவர்களுடைய பெயர்கள் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட தேர்தல் சின்ன இலக்கம், தேர்தல் நடாத்தப்படும் திகதி, நேரம், இடம் பற்றி சங்கத்திற்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். அதன் பின்னர், சங்கத்தினால் தேர்தல் அறிவித்தல்களை தயாரித்து அச்சிட்டு பிரசாரப் பணிகள் செய்ய வேண்டுமென்பதோடு, வாக்குச் சீட்டுக்களையும் அச்சிட்டு தேர்தல் உத்தியோகத்தருக்கு/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தருக்கு /உதவித் தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

8.3 தேர்தல் உத்தியோகத்தரால்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரால்/உதவித் தேர்தல் உத்தியோகத்தரால் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்த நாளில், மு. ப. 9.00 மணிக்குத் தொடங்கி பி. ப. 4.00 மணிவரை நடைபெறும் என்று அறிவித்தல் வேண்டும்.

8. 4 இந்த விதிகளின், 11.2 இற்கு அமைவாக உதவித் தேர்தல் உத்தியோகத்தரால் அவருடைய இலாஞ்சனை பொறித்து வழங்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களில் வாக்களித்தல் நடைபெறும்.

**அபேட்சகர்களுக்குச் சின்னங்களை ஒதுக்குதல்**

*9.1* தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் அபேட்சகர்களின் தொகைக்கேற்ப சின்னங்களை பயன்படுத்துதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட சின்னங்கள் வாக்குச் சீட்டில் அச்சிடப்பட்ட வண்ணம் 1 இலிருந்து ஆரம்பமாகின்ற தொடர் ஒழுங்கில் அமைந்துள்ள சின்னங்களாகவே இருத்தல் வேண்டும்.

**உதாரணமாக**: 15 அபேட்சகர்கள் இருப்பின் 1 இலிருந்து 15 வரையிலான சின்னங்களை பயன்படுத்துதல் வேண்டும். ஒவ்வொரு அபேட்சகருக்கும் இச்சின்னங்களிலிருந்து சின்னமொன்றினை சீட்டிக் குலுக்கியெடுத்து குறித்தொதுக்கல் வேண்டும். தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் ஒவ்வொரு அபேட்சகருக்கும் ஒதுக்கப்பட்ட சின்னங்களினது பதிவொன்றினை வைத்திருத்தல் வேண்டும்.

**வாக்குச்சீட்டுகள்**

10.1 இந்த விதிகளின் அட்டவணை "ஈ" யில் குறிக்கப்பட்டவாறே ஒவ்வொரு வாக்குச் சீட்டும் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

11.1 தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் தேர்தல்களின் போது தலைமை தாங்க வேண்டும்.

11.2 வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் அபேட்சகர் எவருக்கேனும் ஒதுக்கப்படாத சின்னங்களை கீறிவிட்டு, பாவிக்கப்படவிருக்கும் ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும் கிளை இலாஞ்சனையைப் பொறித்து அதன்மேல் கையொப்பமிடுதல் வேண்டும்.

11.3 கிளையினது வாக்காளர் அட்டவணையில் பெயர் காணப்படுகின்ற எவரேனும்ஒருவர் தமது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி உத்தரவுச் சீட்டு அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது புகைப்படத்துடனான செல்லுபடியாகும் அலுவலக ஆள் அடையாள அட்டை அல்லது ஓய்வூதிய ஆள் அடையாள அட்டை தேர்தல் உத்தியோகத்தருக்கு/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தருக்கு/உதவித் தேர்தல் உத்தியோகத்தருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் தமது அடையாளத்தை நிருப்பிப்பதன் பேரில் ஒரு வாக்குச் சீட்டிற்கு உரித்துடையவராவார்.

11.4 வாக்காளர் ஒருவருக்கு வாக்குச்சீட்டு வழங்கப்படுவதற்கு முன்னர் வாக்குச் சீட்டு வழங்குபவர் அவ்வாக்காளரின் பெயர், வாக்காளர் அட்டவணையில் காணப்படுகின்றதா என முதலில் நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

11.5 வாக்காளர் ஒவ்வொருவருக்கும் வாக்குச் சீட்டு வழங்கப்படுகின்றபோது வாக்காளர் அட்டவணையில் காணப்படும் அவர்களின் பெயர்களின் நேரே அடையாளமிடப்படல் வேண்டும்.

11.6 வாக்காளர் எவருக்கேனும் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்படமாட்டாது.

11.7 வாக்காளர் ஒருவர் தன்னால் தேர்ந்தெடுக்கப்படும் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கினை அளிப்பதற்கு உரித்துடையவராவார். அவர் தமது வாக்கைக் கொடுக்கக்கூடிய அபேட்சகரது ஆகக்கூடிய எண்ணிக்கை ஒன்பதாகும். வாக்காளர் ஒருவர் ஒன்பதுக்கு மேற்பட்ட அபேட்சகர்களுக்கு வாக்களிப்பாராயின் அவரது வாக்குச் சீட்டு நிராகரிக்கப்பட்டதாகவே கருதப்படல் வேண்டும்.

11.8 வாக்குச் சீட்டினைப் பெற்றுக் கொண்டதும் ஒவ்வொரு வாக்காளரும் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டில் தான் தேர்ந்தெடுக்கும் சின்னங்கள் அல்லது இலக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் எதிரேயுள்ள கூட்டில் அடையாளமொன்று இடுவதன் மூலம் தனது விருப்பத்தினை தெரியப்படுத்தல் வேண்டும். பின்னர் தேர்தல் உத்தியோகத்தரின்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரின்/உதவித் தேர்தல் உத்தியோகத்தரின் பார்வையில் படக்கூடிய இடத்தில் வைக்கப்பட்டுள்ள வாக்குப்பெட்டியில் வாக்குச் சீட்டினை இடல் வேண்டும்.

11.9 வாக்காளர் ஒருவர், ஏதேனும் உடல் நலக்குறைவு காரணமாக, வாக்குச் சீட்டில் அடையாளமிடுவதற்கு இயலாதவராயிருப்பின் தேர்தல் உத்தியோகத்தரிடம்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரிடம்/உதவித் தேர்தல் உத்தியோகத்தரிடம் தன்சார்பாக அவ்வாக்குச் சீட்டில் அடையாளத்தை இடுமாறு கோரலாம்.

11.10 தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் பி. ப. 4.00 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்து விட்டதாகப் பிரகடனஞ் செய்தல் வேண்டும்.

**வாக்குகளை எண்ணுதல்**

12.1 வாக்களிப்பு முடிவடைந்தவுடனேயே தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் வாக்குப் பெட்டிகளிலுள்ள வாக்குகளை கிடைக்கக்கூடியதான உதவியுடன், எண்ணுவதற்கு

ஆரம்பித்தல் வேண்டும். இதன் பொருட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிகள் 12.2, 12.3 இன் கீழ் அவரால் நிராகரிக்கப்படாத வாக்குகள், புள்ளி எண்ணிக்கைத் தாள்களின் உதவி கொண்டு எண்ணப்படல் வேண்டும்.

12.2 ஒன்பதுக்கு மேற்பட்ட அபேட்சகர்களுக்கு அடையாளமிடப்பட்டிருக்கும் வாக்குச் சீட்டு எதனையும் தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் நிராகரித்தல் வேண்டும்.

12.3 வாக்குச் சீட்டில் இரு அபேட்சகரில் எவருக்கு வாக்காளர்கள் தமது வாக்கினை அளித்துள்ளனர் என்பது தெளிவாகா வண்ணம் அடையாளமிடப்பட்டிருக்குமிடத்து தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தர் அத்தகைய வாக்கினை நிராகரித்து விட்டு மீதியுள்ள வாக்குகளை ஏற்றுக்கொள்வதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு.

12.4 வாக்குச் சீட்டில் வாக்காளர் ஒருவர் ஒரு அபேட்சகருக்கு சாதகமாக ஒன்றுக்கு மேற்பட்ட அடையாளங்களை இட்டிருக்குமிடத்து அத்தகைய எல்லா அடையாளங்களும் ஒரு வாக்காகவே எடுக்கப்படல் வேண்டும்.

12.5 விதி 12.2, 12.3 இன் கீழ் தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் வாக்குச் சீட்டை நிராகரிக்குமிடத்து அத்தகைய நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களை ஒன்றாகக் கட்டி எண்ணிக் கணக்கெடுத்து, வாக்குச் சீட்டுப் பத்திர கணக்குடன் இணங்கச் செய்தல் வேண்டும்.

**தேர்தல் முடிவுகள்**

13.1 வாக்குகளை எண்ணுதல் முடிவடைந்ததும், எஞ்சியுள்ள ஒவ்வொரு அபேட்சகர் பெற்றுள்ள வாக்குகளை விடக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ள ஒன்பது அபேட்சகர் ஒவ்வொருவரும் கிளை நிர்வாக சபையின் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளார்கள் என பிரகடனப்படுத்தல் வேண்டும். இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அபேட்சகர் பெற்றுள்ள வாக்குகள் சமமாக இருக்கக் காணப்படுமிடத்து, தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் அவசியமாயின் சீட்டுக் குலுக்கிப் போடுவதன் மூலம், அத்தகையோரிடையே அபேட்சகர் ஒருவரை அல்லது அபேட்சகர்களை நிர்வாக சபைக்குச் தெரிவு செய்யப்பட்டவர்களாக முடிவு செய்தல் வேண்டும். சில அபேட்சகர்களிடையே சம அளவினதான வாக்குகள் காணப்படினும் அவர்களையும் வெற்றியீட்டியவர்களுடன் சேர்த்து எண்ணுமிடத்து தேவைப்படுகின்ற தொகையினரான அங்கத்தினரைப் பெறக்கூடியதாயிருப்பின் அவ்வண்ணம் சீட்டுக் குலுக்கித் தெரிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது.

13.2 தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களெனப் பிரகடனஞ் செய்யப்பட்ட அபேட்சகர்களது பெயர்களை, குறிப்பிட்டு தேர்தல் முடிவுகளை எழுத்துமூலமாகச் சங்கத்தின் செயலாளருக்கு தெரியப்படுத்தல் வேண்டும். இக்கடிதத் தொடர்பின் பிரதியொன்று தேர்தல் உத்தியோகத்தரினால்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் அப்பிரிவின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

13.3 சங்கச் செயலாளர் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது பெயர்களை அலுவல்கள் நடாத்தப்படும் இடத்தில் அக்குறிப்பிட்ட கிளையின் அலுவலகத்திலும் துலக்கமான முறையில் பத்து நாட்களுக்குக் குறையாத காலம் பார்வையிடுவதற்கு வைத்தல் வேண்டும்.

14.1 வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட முறை சம்பந்தமாக அல்லது வாக்கு எண்ணல் சம்பந்தமாக அல்லது தேர்தல் முடிவுகள் பிரகடனப்படுத்துவது சம்பந்தமாக ஏதேனும் பிரச்சினைகள் எழக்கூடுமென தேர்தல் உத்தியோகத்தர்களின் கருத்தாகவிருக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த நடவடிக்கைகளை பிற்போடுவது தொடர்பில் தீர்மானித்தல் அத்துடன் அது தொடர்பில் எழுகின்ற அத்தகைய கேள்விக்கும் தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் அளிக்கும் தீர்ப்பு இறுதியானதும் முடிவானதுமாகும்.

பகுதி IV

**நானாவித விடயங்கள்**

15.1 தேர்தல் முடிவுகளைப் பிரகடனப்படுத்தியதன் பின்னர், தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர் பின்வருவனவற்றை நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(i) பாவிக்கப்படாத வாக்குச் சீட்டுக்களும், அடையாளமிடப்பட்ட வாக்காளர் அட்டவணைகளும் நியமிப்புப் பத்திரங்கள் யாவும் இந்த விதிகளின் 7.6, 7.7 என்னும் விதியில் குறிப்பிட்ட நாட்குறிப்பேட்டின் பிரதி ஒன்றும் தபால் உறையொன்றினுள் இடப்பட்டு இலாஞ்சனையிடப்பட்டு சங்கத்தின் செயலாளருக்கு கையளித்தல் வேண்டும் ;

(ii) நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களையும் இந்த விதிகளின் 7.6, 7.7 எனும் விதியில் குறிப்பிட்ட நாட்குறிப்பேட்டின் மூலப்பிரதியையும் வேறொரு தபால் உறையினுள் இட்டு இலாஞ்சனை இடப்பட்டு பிராந்தியக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

16. சங்கமொன்றின் கிளை நிர்வாக சபைத் தேர்தல் சம்பந்தமான சகல செலவுகளும் அச்சங்கத்தினாலேயே பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

17. அனைத்து அட்டவணைகளும் அடங்கலாக இந்த விதிகளுக்கு மேலும் விதிகளைச் சேர்ப்பதற்கும், விதிகளை திருத்துவதற்கும் மாற்றுவதற்கும் அல்லது நீக்குவதற்கும் ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது.

18. இந்த விதிகளின் வரைவிலக்கணம் குறித்து பிணக்குகள் யாதேனும் ஏற்படின் அது சம்பந்தமாக ஆணையாளரது முடிவு இறுதியானதும் முடிவானதுமாகும்.

பகுதி V

**வரைவிலக்கணம்**

19.1 இந்த விதிகளில் "உபவிதிகள்" என்பது, சங்கத்தின் குறித்த ஒரு காலத்திற்கு நடைமுறையிலிருப்பதான பதிவு செய்யப்பட்ட உப விதிகளைக் குறிப்பதுடன், உப விதிகளின் பதிவு செய்யப்பட்ட திருத்தங்களையும் உள்ளடக்கி இருக்கும்.

19.2 விதிகள் 7 (2) (அ), 17, 18 இல் கொடுக்கப்பட்டிருப்பதைத் தவிர "ஆணையாளர்" என்பது, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரை அல்லது கூட்டுறவு அபிவிருத்தி பிரதி ஆணையாளரை அல்லது கூட்டுறவு அபிவிருத்தி சிரேட்ட உதவி ஆணையாளரை அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரை அல்லது மேல் குறிப்பிடப்பட்ட ஒருவரினால் உரிய முறையில் அதிகாரம் கையளிக்கப்பட்ட அத்தகைய ஒருவரைக் குறிக்கும்.

19.3 விதிகள் 7 (2),(அ), 17, 18 இல் "ஆணையாளர்" என்பது, வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரை/ பதிவாளரைக் குறிக்கும்.

19.4 "தேர்தல் உத்தியோகத்தர்/வலயப்பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தர்/உதவித் தேர்தல் உத்தியோகத்தர்" என்பது, அப்பிராந்தியத்திற்குப் பொறுப்பாகவுள்ள உதவி ஆணையாளரினால் இவ்விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட சங்கக் கிளைக்கென தேர்தல் நடாத்துவதற்காக நியமிக்கப்பட்டவரைக் குறிக்கும்.

19.5 "வாக்காளர்" என்பது, கிளை தொழிற்படும் பிரதேசத்திலிருந்து சங்கத்தில் உறுப்புரிமை அனுமதிக்கப்பட்டு சொல்லப்பட்ட கிளை நிர்வாக சபைத் தேர்தல் நோக்கத்திற்காக முறையாக உறுதி செய்யப்பட்ட வாக்காளர் அட்டவணையில் தமது பெயரைக் கொண்டுள்ளவரைக் குறிக்கும்.

19.6 "கூட்டுறவு சட்டம்" என்பது, வடமேல் மாகாணத்தில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள கூட்டுறவுச் சங்கச் சட்டம் அல்லது கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தைக் குறிக்கும்

20. இந்த விதிகளில் சிங்களம் மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை "அ"**

கிளை நிர்வாக சபையின் தேர்தல் சம்பந்தமாக தேர்தல் உத்தியோகத்தர்களை /உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது உபயோகிக்கப்படவேண்டிய நியமனக் கடிதத்தின் மாதிரிப்படிவம்

வரையறுக்கப்பட்ட.......................................... பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 23 ஆம் உப விதியின் கீழ் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால்/ பதிவாளரினால் ஆக்கப்பட்ட விதிகளின் விதி 3 (1) ஆல் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டும்................. ஆம் திகதியிடப்பட்டதும்......................... ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுமான அறிவித்தலுக்கு அமைவாக................ ஆம் இலக்கம் கொண்ட ................................ கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் பதியப்பட்டதாகக் கருதப்படுவதுமான அத்துடன் 1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுவதுமான மேற்போந்த சங்கத்தின்................ ஆம் இலக்க கிளையின் நிர்வாக சபையை நியமித்துக் கொள்வதற்காக தேர்தல் உத்தியோகத்தராக /வலயப் பொறுப்பு தேர்தல் உத்தியோகத்தராக /உதவித் தேர்தல் உத்தியோகத்தராக திரு. /திருமதி/செல்வி.................................... அவர்களை இத்தால் நியமிக்கின்றேன்.

.............
ஒப்பம்.
......................
பெயர்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

திகதி :................................

**அட்டவணை "ஆ"**

நியமிப்புப் பத்திரம்

1. சங்கத்தின் பெயரும் முகவரியும் :

2. கிளை இலக்கமும் முகவரியும் :

3. அபேட்சகர்,முன்மொழிபவர்,வழிமொழிபவர் ஆகியோரின் விபரங்கள் :

| | அபேட்சகர் | முன்மொழிபவர் | வழிமொழிபவர் |
|---|---|---|---|
| முழுப்பெயர் | | | |
| வயது | | | |
| முகவரி | | | |
| அங்கத்தவர் இல. | | | |

4. மேற்குறிப்பிட்ட எமது கிளை நிர்வாக சபை ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆக்கப்பட்ட விதிகளின் 4.1 இன் கீழ் தகைமையுடையவர்கள் எனவும் இந்த கிளை சங்கத்தின் அங்கத்தவர்கள் எனவும் கூட்டுறவுச் சங்கமொன்றின் கிளை நிர்வாகச் சபையொன்றைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆக்கப்பட்ட விதிகளின் 5.2 இன் கீழ் தேவையாள அபேட்சகரின் உறுதியுரை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதெனவும் உறுதி செய்கின்றோம்.

......................................................................
அபேட்சகரின் கையொப்பம்.

......................................................................
முன்மொழிபவரின் கையொப்பம்.

..................................................................
வழிமொழிபவரின்கையொப்பம்.

திகதி :....................

**அட்டவணை "இ"**

கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிர்வாக சபை தேர்தல் பொருட்டு செய்யப்பட்ட விதி 5.2 இன் கீழ் செய்யப்படும் உறுதியுரை

............................................................... ஆகிய நான், மட்டுப்படுத்தப்பட்ட................................. ஆம் இலக்கக் கிளையின் நிர்வாக சபைத் தேர்தலுக்கு நியமிக்கப்படுவதற்கு சம்மதிக்கிறேன்.

......................................... ஆம் திகதியிடப்பட்டதும் ............................... ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்துள்ளதும் கூட்டுறவுச் சங்கமொன்றின் கிளை நிர்வாக சபை தேர்தல் பொருட்டுச் செய்யப்பட்டதுமான விதிகளின் 4.1 விதியின் கீழ், அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகைமை நீக்கம் காரணமாக நான் தகைமையற்றவன் அல்லவென உறுதியுரைகின்றேன்.

...............................................
அபேட்சகரின் கையொப்பம்.

திகதி :.................

**அட்டவணை "இ 1"**

முன்மொழிபவரின், வழிமொழிபவரின் உறுதியுரை

................................................................. ஆகிய நான், வரையறுக்கப்பட்ட.......................... பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவர் என்பதுடன், அட்டவணை "அ" வில் சமர்ப்பிக்கப்பட்டதும் என்னால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................................................
அபேட்சகரின் கையொப்பம்.

......................................................................
முன்மொழிபவர்/வழிமொழிபவர் கையொப்பம்.

திகதி :.............................

......................................................................
முன்மொழிபவர்/வழிமொழிபவர் பெயர்.

**அட்டவணை "ஈ"**

கூட்டுறவுச் சங்கமொன்றினது கிளையின் நிர்வாக சபைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டு

தேர்தல் உத்தியோகத்தர் / உதவித் தேர்தல் உத்தியோகத்தர் ஒப்பம்..............................

தொடர் இலக்கம் :

கிளையின் இலாஞ்சனை :

| சின்னம் | வாக்காளர் அடையாளம் | சின்னம் | வாக்காளர் அடையாளம் | சின்னம் | வாக்காளர் அடையாளம் | சின்னம் | வாக்காளர் அடையாளம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 9 | | 17 | | 25 | |
| 2 | | 10 | | 18 | | 26 | |
| 3 | | 11 | | 19 | | 27 | |
| 4 | | 12 | | 20 | | 28 | |
| 5 | | 13 | | 21 | | 29 | |
| 6 | | 14 | | 22 | | 30 | |
| 7 | | 15 | | 23 | | 31 | |
| 8 | | 16 | | 24 | | 32 | |



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.